சைவ பரிபாலன சபை வெளியீடு
ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணி மீ 28-ம் உ

உ
சிவமயம்

இலங்கைத் தபாலகத்தில் பதிவு பெற்றது

# இந்து சாதனம்

வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

Hindu Organ

பிரதி விலை : சதம் 40

மாசில் வீணையும் மாலைமதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத்-93] யாழ்ப்பாணம்:- துர்மதி ஞு, மாசி - பங்குனிமீ 26-2-82, 5, 12, 19-3-82 வெள்ளிக்கிழமை [இல-25

# தேடிப் பிடிக்கட்டுமாப் தீர்த்தப் புகழ்பூத்த பாலாவியை

## கண்ணிருந்தும் காணாதாரைக் கண்ணுதலான் அருட்கருணைகொண்டு உணர வைப்போம் - உள்ளங்கை நெல்லிக்கனியை

"அத்துமீறல் அடாதது செய்தல் சட்டப்படி ஆகாதனவென்று குற்றமாய்க் கொள்ளப்படுவதை அனைவரும் அறிவர். ஆனால் மனச்சான்றின்படி அது மாபாதகம் ஆகும். மாந்தையிலே நெடுஞ் சாலைகள் நான்கு இணையும் சந்தி ஒரு இயற்கை எல்லையாகக் கொண்டது திருக்கேதீச்சரம். இந்தச் சந்தி பாத யாத்திரிகர்களின் பாதங்களைப் பத்தர்கள் நீராற் புனிதப்படுத்தி சாட்டாங்கமாகப் பணிந்த தூய்மையால் ஆண்டுக்காண்டு மேலும் தூய்மை யடையும் தன்மை வாய்ந்தது. இந்த எல்லையை மீறிப் புனிதப் பிரதேசத்தை அபகரிப்பது சட்டப்படி மட்டுமல்ல மனச்சான்றின்படியும் ஆகாச் செயல் என்பதை எடுத்து விளக்க வேண்டியதில்லை"

இவ்வாறு யாழ் சைவ பரிபாலன சபையாரின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நல்லை ஆதீன ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரியசுவாமிகள் தலைமையில் மாசித் திங்கள் பதினைந்தாவது நாள் நிகழ்ந்த சைவமக்களின் மாபெரும் பொதுக்கூட்டத்தில் உரை ஆற்றிய இந்து சாதன ஆசிரியர் நம. சிவப்பிரகாசம் அவர்கள் குறிப்பிட்டு மேலும் பின்வருமாறு கருத்துரைத்தனர்.

"ஆலயங்களுக்கான எல்லையை அநுமானிப்பதற்கு அடியார்கள் அருமையான முறையை அன்றுதொட்டுக் கையாண்டு வந்திருக்கின்றனர். எங்கிருந்து திருக்கோயிலின் இராசகோபுரம் கண்ணுக்கெட்டுகின்றதோ அங்கிருந்து அத்தலத்தை நடுமையமாகக் கொண்டு ஆரைக் கோட்டு வட்டம் அமைகின்ற நிலப் பரப்பு அந்த ஆலயத்தின் புனிதப் பரப்பிடமாகும், எல்லாச் சமயத்தவர்களின் வழிபாட்டுப் புனித நிலையங்கள் வானளாவுஞ் சிகர அமைப்புக்களைக் கொண்டிருப்பதன் காரணம் இந்தப் புனித எல்லையைக் காட்டுவதற்கே. இல்லங்களுக்குத் தாழ்வாரம் இறவாரம் என்று அடர்த்தியான நகரங்களில் அவ் வெல்லையை மீறி மற்றையோர் வீடு அமைப்பது சட்ட விரோதமாகும் என்பதையும் இங்கே குறிப்பிடுதல் பொருத்தமாகும்

திருக்கேதீச்சரத்தின் வரலாற்றைப் புதிதாக எடுத்துக்கூற வேண்டியதில்லை, திருமுறைப் பெருஞ் சமயகுரவர்கள் இருவர் இந்நாட்டில் போர்த்துக்கேயப் புறமதத்தவர்கள தங்கள் மதத்தைப் புகுத்தமுன் பல்லாண்டுகளுக்கு மாதோட்டத்தையும் பாலாவித் தீர்த்தத்தையும் தொண்டர் சீர்பரவும் திருக்கேதீச்சரத்தையும் பாடியருளியிருக்கின்றனர்.

புறமதத்தாரின் புன்செயல்களாற் பொடி பொடியாக அழிக்கப்பட்ட புனித திருக்கேதீச்சரத்தைத் தேடிப் பிடித்தவர் நன்னெறிக்காவலர் நாவலர் அவர்கள். தேடிய இத்தொண்டர் அதனை ஓர் தேன் பொந்தெனக் குறிப்பிட்டுப் புனர் அமைப்புப பணியை மேற்கொண்டு சைவ மக்களை அவ் வழியில ஈடுபடுத்தினர். இந்த நடு நிலப் பரப்பு அந்த அந்நிய அரசினால் அபகரிக்கப்பட்டதால் அரசுக்குரியதாய்விட்டதே யல்லாமல் அப்பெரும் பிரதேசம திருக்கேதீச்சரத்துக்கே யுரியதென்ற உண்மையை மறுக்க முடியாது.

அதன் பின்பு சைவநெறி வைசியப் பெருமக்களும் யாழ். நாட்டு சைவப் பெருமக்களும் (இவர்களிலே சைவ பரிபாலன சபையையும் இந்துசாதனத்தையும் இந்துக் கல்லூரியையும் நிறுவும பெரும்பணியிலே ஈடுபட்டவர்களுள் ஒருவராகும திரு. சித. மு. பசு

(வளர்ச்சி 8ம் பக்கம்)

---

சைவ பரிபாலன சபை
யாழ்ப்பாணம்

## அகில இலங்கைச் சைவ மாநாடு 1982

எதிர் வரும் சித்திரை மாத இறுதியில் அகில இலங்கைச் சைவ மகாநாடு நடைபெறும். அதற்குரிய ஒழுங்குகளை மகாநாட்டு அமைப்பாளர் மேற்கொண்டுள்ளார்.

---

## பஞ்ச இரதோற்ஸவம்

யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் பஞ்ச இரதோற்ஸவம் பங்குனி 23ம் நாள் 5-4-82 திங்கட்கிழமை வெகு சிறப்பாக நடைபெறவிருக்கிறது. அன்று காலை 6 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் 7-30 மணிக்கு விநாயகர், சுப்பிரமணியர், உபயசக்தி சமேத சோமாஸ்கந்தர், சண்டேஸ்வரர் ஆகிய பஞ்ச மூர்த்திகள் இரதத்தில் ஆரோகணித்தலும் மாலை 4 மணிக்கு இரதா அவரோகணமும் இடம்பெறும்.

மறுநாள் தீர்த்தோற்ஸவமும் அடுத்த பூங்காவனமும் நடைபெறும.

திருவிழாக் காலங்களில் தினமும் மாலை 5-30 மணி முதல் 6-30 மணி வரை திருப்பூங்குடி வி. வி. கே. ஆறுமுகம் அவர்களால் "ஞானசம்பந்தர்" தொடர் விரிவுரை பக்கவாத்திய சகிதம் நடைபெற்று வருகின்றது,

பங்குனி 22ம் நாள் 4-4-82 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு பிச்சாடனர் உற்சவம் வெகு சிறப்பாக நிகழும்.

---

## ஸ்ரீமதி சடையம்மா மன்றத்தினரின் சைவத் திருமுறை விழா

"எந்தை கோயிலுட் டிருமுறைமண்டப மெடுத்து
தந்தபீடிகைத் தலத்தினிற்
திருமுறை தந்த
இந்தை வள்பிளை டாங்கதற்
கருச்சனை செய்தா(ல்)
உந்தும் ஏற்றினன் பிரதிட்டை
மோடியொப்புறமால்".

யாழ்ப்பாணம் திருநெல்வேலி கிழக்கில் விளங்கும் வெள்ளைப் பிள்ளையார் கோவிலிலே தெற்கிலுள்ள சடையம்மா மன்றத் திருமுறை கோயில் விழா 14-4-82 வருடப் பிறப்பிலன்று நடத்தத் திருவருள் கைகூடப்பெற்றதால் முற்பகல் அன்னதானமும், பிற்பகல் 5 மணியளவில் திருமுறைப் பெருமான் புறப்பட்டு இராமலிங்கம் வீதி, ஆடியபாதம் வீதி, பருத்தித்துறை வீதி, சட்டநாதர் வீதி வழியாக வந்து மன்றக் கோயிலையடையும். திருமுறை ஊஞ்சலும் நடைபெறும்.

### மகாகும்பாபிடேகம்

நல்லூர் - நல்லை ஞான சம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாததேசிக பரமாசாரியசுவாமிகள் குருமூர்த்த ஆவர்த்தன பிரதிஷ்டா கும்பாபிஷேகம் 28-3-82 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. காலை 9.00 மணிக்கு ஸ்தூபி கும்பாபிஷேகமும்; 9-45 மணிக்கு மூர்த்தி கும்பாபிஷேகமும், பி. ப. 2.00 மணிக்கு மகாபிஷேகமும் இரவு 7 மணிக்கு சுவாமி அம்பாள் வீதிஉலாவும் இடம் பெற்றன. கம்பன் கழக விழாவிற்காக ஆதீனத்துக்கு வருகை தந்திருந்த தமிழகப் பேராசிரியர் க. இராதாகிருஷ்ணன் அவர்கள் நிகழ்ச்சிகளிற் கலந்து கொண்டனர், ஏராளமான அடியார்கள் கலந்திருந்து பேரானந்தமுற்றனர்.

---

## கந்தபுராண ஏடு மாவைக் கந்தன் கோயில் வீதிவலம்

### கவின் பொலிந்த கச்சியப்ப சிவாசாரியர் விழா

காலை ஆறுமணிப் பூசையுடன் மாவைக் கந்தசுவாமி கோயிலில் ஆரம்பமான கச்சியப்பசிவாசாரியர் குருபூசை விழாவில் இப் பழம் பெரும் ஆலயத்திலே தொன்று தொட்டுப் பேணிப் பாதுகாதது வரப்படும் கந்தபுராண ஏடு யானை வாகனத்தில், மகரதோரண அணி பொலிந்த வீதிகள்வலம் கற்பூரச் சட்டித் தீபப் பேரொளி விளக்கத்துடன், நாதசுர இசையும், திருமுறைப் பண்ணிசையும் ஒலிக்க, பாடசாலை மாணாக்கர் சிறுமிகள் மலர்க் குவியல்களை அர்ப்பணிக்க, மாவை ஆதீன கர்த்தாவின் ஆசி வாழ்த்துரையுடன், ஆதீன அந்தணப் பெரியார்கள், அமெரிக்க நாட்டுப் பழனிச் சுவாமிகள் அகில இலங்கைச் சைவமகாசபையினருடன் அடியார்கள் புடை சூழப் பவனி வந்த திருக்கோலம் பழமைக்கால விழாப பண்பினை எடுத்துக் காட்டுவதுபோன்றிலங்கியது,

முற்பகற் பூசை முடிந்ததும் சபைப் பொருளாளர் முத்தமிழ்மணி பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை அவர்

(வளர்ச்சி 8ம் பக்கம்)

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

துர்மதி ளு மாசி — பங்குனி மீ
26-2-82 — 19-3-82 வெள்ளி

## கச்சியப்பர் தந்த கந்தபுராணம் ஓர் கற்பகதரு

காஞ்சிக் குமரகோட்டத்துக் கவுணியன் காஞ்சி மாவடி வைகும் செவ்வேளின் கதையைக் காசினி வாழ்வோர் நயங் கருதிக் கந்தபுராணமென்னும் கருத்துப் பொருந்துமுறச் சைவ சித்தாந்தப் பெருந் தத்துவத்தைக் கடவுளின் அற்புத நிகழ்ச்சிகளில் அமைத்து விளக்கும் மெய்யறிவுக் களஞ்சிய நூலாக யாத்து, என்றும் நின்று நிலவுக உலகெலாம் என்று சேக்கிழார் சுவாமிகள் தொண்டர்சீர் தொடர்ந்து பரவும் பான்மை யாதென வெடுத்துரைத்தாற் போன்று, உலகெலாம் உணர்ந்தோதி உய்ய உவந்தளித்தனர்.

கவினுர் காஞ்சிபுரத்தில் ஏகாம்பரநாதர் கோயிலில் எழுந்தருளியிருக்கும் விகட சக்கர விநாயகப்பெருமான் கமல பாதங்களைச் சரணமாகக்கொண்டு கச்சியப்ப சிவாசாரியர் தந்த செம்பொருட் செய்யுட் களஞ்சியத்திற் பொன்னும் மணியும் முத்தும் போன்றுள பாக்கள் யாவும் மெய்யறிவு விளக்கும் பான்மையின என்ற உண்மையை இந்நூலாக் கதையைச் சிரத்தை கொண்டு படிப்போர் அறிந்துணர்வர்.

இயற்கைக் கவினுர் என்றுல் இறை அருள் பொலியப் பெற்ற புலவர் என்பது பொழிப்பாகும். சொற்றொடர் ஒவ்வொன்றும் தனித்தும் ஏனையவற்றுடன் இணைந்தும் மெய்ப் பொருளைக் காட்டும்பான்மையில் அமைதலைக் கந்த புராணம் முழுவதிலும் காணலாம்.

நாற்பயன் நவின்ற சிவாசாரியர், இப் புராணத்தை இதய பூர்வமாக எடுத்தியம்பி வருவோரும் அவர்கள் வாய்க் கேட்போரும் சிவ உதயதனிற் சேர்வர் என்று உரைக்கும்பொழுதே; சிவ புண்ணியங்களைச் செய்வித்தற்கேதுவாகும் இப்புராண படனமென்றும் அவ்வாறு புண்ணியம் பெற்றவருறும் பேறு சிவகதியென்றும் ஆழமான கருத்தினைப் பொதிந்து புகட்டியிருக்கின்றனர். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் அரும பயன் நான்கினையும் அளிக்கும் ஆற்றல் பொருந்

நியதிக்கதை என்பர். தொடுத்துத்தொகுத்த வாழ்த்து கச்சியப்ப சிவாசாரியரின் உள்ளக் கிடக்கையை ஒவ்வொன்றெடுத்துக்காட்டுகின்றது.

வான்முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலக மெல்லாம்.

நீதிநெறியிதென நீணில மக்கள் வாழ வழி காட்டி இந் நீர்மைச் செம்மையுற வெனிற் சைவ ஒழுக்கமே முறைப்படுத்தும் என்னும் பொழுது இந் நூலாசிரியர் நல்லவண்ணம் வாழ்வதெங்ஙன் என்று முன் சொல்லிப் போந்த நால்வரின் நடைமுறையைப் பின் மொழிந்தவாறு விளங்குகின்றார்.

### சைவமாம் நீதி

ஒழுக்க நெறிதான் சமயம், ஒழுங்கினம் என்ற எல்லாவற்றினின் நம்விலகி ஒழுக்கமான யாவற்றையும் நடைப்பிடிக்கும் ஒழுக்கமே தான் சைவம், எனவே சைவ சமயம் நீதி நெறியே சைவமாஞ் சமயஞ் சார்தல் என்பது நீதி வழுவா நெறி நிற்பதையே குறிக்கும்.

மாதம்மும்மாரி பெய்தல், பெய்யவே வாழ்க்கைக்குரிய வளம் செழித்தல், செழிக்கவே அரசியல் பிழையா ஆட்சி நடைபெறல், நடைபெறவே நானில மக்கள் யாதொரு குறையுமின்றி நிறைவாக வாழ்தல்; வாழவே வேத நான்கிலும் மெய்ப்பொருள் விளங்குதல் நன்னெறியாகும்.

## மகா கும்பாபிடேகம்

யாழ்ப்பாணம் - நாயன்மார்கட்டு அருள்மிகு ஆதி பைரவர் தேவஸ்தான புனராவர்த்தனப்பிரதிஷ்டா மகாகும்பாபிடேகம் துர்மதி பங்குனி 8ம் நாள் (21-3-82) ஞாயிற்றுக்கிழமை காலை 9 - 22 முதல் 10.83 வரை நிகழ்ந்த சுப வேளையில் சிறப்பாக நடைபெற்றது.

## இந்துமாநாடு

### பக்திப் பாடல் இசைப் போட்டி

எதிர் வரும் சித்திரை மாதத்தில் நடைபெறவிருக்கும் அகில உலக இந்து மகாநாடு சார்பாகப் பக்திப் பாடல் இசைப் போட்டிகளைப் பிரதேச அபிவிருத்தி அமைச்சு நடாத்த ஏற்பாடுகள் செய்துள்ளது. தராதரப் பத்திரங்கள் உடையவர்க்கும் இல்லாதவர்க்குமிடையில் வேறு வேறாக நடக்கவிருக்கும் இப் போட்டிகளில் வெற்றி பெறுவோருக்குத் தங்கப் பதக்கம் முதலாம் பரிசில்கள் இந்து மகாநாட்டின் போது வழங்கப்படும்.

## தேடிப் பிடிக்கட்டுமாம் ...............

( 1 ஆம் பக்கத்து வளர்ச்சி )

பதிச் செட்டியார் ஒருவர் ) ஆங்கிலேய அரசிடம் மனுப் பண்ணித் திருக்கேதீச்சரத்தைப் புதிதாக அமைக்கும் பெருந் தொண்டாற்றிவந்த வழி சைவப்பெரியார் சு சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்கள் தலைமையிலே திருப்பணிஅவை உருவாகி அரும்பணி செய்ததைத் தொடர்ந்து வீரர் கந்தையா வைத்தியநாதன் செயலாற்றும் காலத்தில் ஒரு பரபரப்பான முயற்சியில் புறமதத்தவர்கள் முற்பட்டனர். இந்த இக்கணை இமைப்பொழுதும் உறங்காது கண்ணுங் கருத்துமாக இருந்து நீக்கி வைத்தவர் வீரர் வைத்தியநாதன் அவர்கள்.

சம்பவங்கள் யாவும் சர்வபராபரன் ஒருவன் உண்டு என்ற உண்மையை அடிப்படையாகவுள்ளன. எச்சமயமும மெய்ச் சமயம் என்ற பரந்த நோக்கம் மனித குல மாண்பிற்குரியது. ஒன்றோடொன்று பொருத வேண்டியதில்லை. எல்லா மதங்களும் இறைவனுக்கு நிலையங்களை அமைக்கும் உரித்துடையவர்கள் ஆனல் இந்த உரிமையின் உகந்த அடிப்படை ஒரு வழிபாட்டு நிலையம் இன்னொரு வழிபாட்டு நிலையத்துக்கு இடையூறாக இருக்கவொண்ணுதென்பது.

இசுலாமியர் கிறீத்தவர் புத்தர் இவர் எல்லோரும் தத்தம் வழிபாட்டு நிலையங்களை வைத்திருக்கின்றார்கள். எங்கேனும் சைவ மக்கள் இந்தப் புனித எல்லைக்குள் அத்துமீறி அடாத்தாகப் புகுந்து தங்களுக்குக் கோயில்கள் அமைத்திருக்கிறார்களா? அமைக்க எண்ணுவார்களா? பாவம் பாதகம் என்பன இல்லையென்றாலும் இப்படி இயங்கமாட்டார்கள்; இது சைவ சன்மார்க்கம்.

இந்த இடத்திலே பாரம்பரியம் என்ற தகைமை தோற்றுவிக்கும் உரிமையைப்பற்றிச் சற்று உற்று நோக்குவது பொருத்தமாகும்.

இந்நாட்டில்மட்டுமல்ல எந்த நாட்டிலும் பாரம்பரியப் பிரதேசம் (Traditional Homelands) என்ற அடிப்படையிலே ஆட்சி உரிமையை முன்வைத்து வருவதை யாவரும் அறிவர். அது அரசியலில். அந்த வகையிலே எல்லா இயலுக்கும் இந்தப் பாரம்பரியம் பொருத்தமாகும்.

( வளர்ச்சி 3 பக்கம் )

## கந்தபுராண ஏடு

( 1 ஆம் பக்கத்து வளர்ச்சி )

களது தலைமையிலே கந்தபுராணப் பாயிரப் படல படனம் நிகழ்ந்தது.

நண்பகல் மாகேசுர பூசையின் பின் மூன்று மணியளவிலே சபைத்தலைவர் திரு. நம. சிவப்பிரகாசம் பிற்பகல் நிகழ்ச்சிகளைத் தொடக்கி வைத்துத் துணைத் தலைவர் இலக்கண வித்தகர் பண்டிதர் இ. நமசிவாயம் அவர்களைத் தலைமை தாங்கி நடாத்த அமர்த்தியதும் பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை அவர்கள் வரவேற்புரை கூறினர்.

இலக்கண வித்தகர் தலைமையுரையிலே கச்சியப்பரும் கந்தபுராணமும் கலிகால நலிவுக்கு நிவாரணம் அளிக்கும் சஞ்சீவிகள் என்று எடுத்துக்காட்டி அந்த ஏடகத்தை விநியோகிக்கும் தகைமை அகில இலங்கைச் சைவ மகாசபைக்கு நனி பொருந்தியதென்றும் கூறினர்.

பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களின் ஆரம்ப உரை வாசிக்கப்பெற்ற பின் "சூரன் கண்ட முருகனை"ச் சபையினர் காண வைத்தனர் விரிவுரையாளர் ச, விநாயகமூர்த்தி அவர்கள்.

இந்துப்பண்பாட்டிற் கந்தபுராணம் எந்த அளவிற் சிறந்ததென வரலாற்றுத் துறைக்கலாநிதி சி. க. சிற்றம்பலம் அவர்கள் எடுத்துக் காட்டினர்.

காவிய நெறியிற் கந்தபுராணம் மேவிய கலைத்திறனை மொழி பண்பாட்டுத் துறைக் கலாநிதி அ. சண்முகதாஸ் அவர்கள் தொகுத்துரைத்தனர்.

"கந்தபுராணமும் தமிழர்வாழ்வும்" தத்துவ மகத்துவ அடிப்படையிலுள்ளதென்று தத்துவத்துறைப் பேராசிரியர் வே, இராமகிருஷ்ணன் அவர்கள் விரித்துரைத்தனர்.

தமிழ்த்துறை விரிவுரையாளர் பிரம்மஸ்ரீ நா சுப்பிரமணிய ஐயர் அவர்கள் இந்துத் தத்துவத்தைக் கந்தபுராணத்துடன் இணைத்துக் கருத்துரைத்தனர்

அமெரிக்க நாட்டுச் சைவ அடியார் பழனிச் சுவாமி அவர்கள் சைவ சமய மகத்துவம்பற்றி ஆங்கிலத்தில் ஆற்றிய உரையை பண்டிதர் சச்சிதானந்தன் மொழிபெயர்த்து விளக்கினர்.

சபைத் தலைவர் திரு, நம, சிவப்பிரகாசம் முடிவுரையாற்றியதும், செயலாளர் திரு. செ நவரத்தினம் அவர்கள் பெரியதோர் விழாவாக விரிந்த நிகழ்ச்சிகள் நிறைவுறச் செய்தோர் அனைவருக்கும் நன்றிகூறினர். மாலை ஆதீன இசை வல்லுநர்கள் திருப்புகழ்க் கானமிர்தம் அளித்தனர்.

—0—

## "விழிப்புணர்வுபற்றிய விளக்கங்கள்" நூல் வெளியீடு

கண்டபிளா கல்விக் கழகத்தின் சார்பில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் 9 3 1982 நிகதி நிகழ்ந்த வைபவத்திற்குப் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமை தாங்கினர்.

திரு. கந்தையா நவரேந்திரனின் தமிழ் ஆக்கமாகிய இந் நூல்பற்றிப் பேராசிரியர் இ. கனகசுந்தரம் கலாநிதி வே. இராமகிருஷ்ணன் பிரம்மஸ்ரீ நா. சுப்பிரமணியஐயர், செல்வி மல்லிகா கனகரத்தினம், சட்டத்தரணி திரு. ந. சத்தியேந்திரா, மாவட்ட நீதிபதி திரு. க. வி. விக்கினேஸ்வரன் மாவட்டநீதிபதி திரு. தி. க. தி. திலகன் அவர்கள் ஆய்வுரைகள் ஆற்றினுர்கள்.

## பல்வகைச் சேவை நலன் கணிப்பு விழா

ஆசிரியராகவும் கல்விப் பகுதி வித்தியாதரிசியாகவும் பெரும்பாகத் தலைமை வித்தியாதரிசியாகவும் நற்பணி புரிந்து ஓய்வெடுத்த பின் சமய சமூக கலாசாரத் துறைகளிலே அருந் தொண்டாற்றிவரும் திரு. அ. சரவணமுத்து அவர்களின் பல்வகைச் சேவை நலன் அண்மையில் மல்லாகம் கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் இந்துசாதன ஆசிரியர் நம. சிவப்பிரகாசம் அவர்கள் தலைமையில் பாராட்டப்பட்டது.

ஓய்வுபெற்ற மாவட்டநீதிபதி திரு. வி. மு. குமாரசுவாமி அவர்கள் தலைமையிற் செயற்பட்ட பாராட்டுச் சபைக்குழு இந்நிகழ்ச்சியை நல்ல நெறியாக ஒழுங்கு செய்திருந்தனர். மல்லாகம் மாதர் மன்றமும் கிராம முன்னேற்றச் சங்கமும் பெரும்பங்கெடுத்தன.

மாவட்டசபைத் தலைவர் திரு. சு. நடராசா, வரலாற்றுத்துறைப் பேராசிரியர் கலாநிதி க. இந்திரபாலா, வைத்திய கலாநிதி மு. வேதாரணியம் ஓய்வுபெற்ற அதிபர் திரு. ச. அம்பிகைபாகன், பௌராணிகர் பிரம்மஸ்ரீ வ. குகசர்மா ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் திருமதி தி. மங்கையர்க்கரசி, அதிபர் திரு. தி. இராசரத்தினம், கிராம முன்னேற்றச் சங்கச் செயலாளர் திரு. மு. அருளையா. ஆசிரியை திருமதி ந. செல்வராணி, ஆசிரியர் சி. விஜயராசசிங்கம், பண்டிதர் இ. நமசிவாயம் இவர்கள் எல்லோரும திரு. சரவணமுத்து அவர்களின் பல வேறு பணிகளின் பயனை நன்கு வியந்துரையாற்றினர்.

திரு. சரவணமுத்து அவர்கள் தமக்குப்பாராட்டு நிகழ்த்தியதை மகிழ்ந்து உரை நிகழ்த்துகையிற் சைவ நெறியில் வாழ்வதையும் பொதுநல சேவை செய்வதையும் எல்லோரும் நியமமாகக் கொள்ளவேண்டும் என்றும் புராணபடன வகுப்புக்கள் நடத்துவது அவசியம் என்றும் சுட்டிக் காட்டினர்,

# கோட்டுக் கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்
வழக்கு இல: 13493 / ஈடு

1. சிதம்பரப்பிள்ளை செல்வரத்தினம்
பெண் பூபதி, இமையாணன் உடுப்பிட்டி
எதிராக — வழக்காளிகள்

1 ஆறுமுகம் அம்பலவாணர் கார்த்திகேசு
2 பெண் தங்கம்மா உரும்பராய் தெற்கு
— எதிராளிகள்

மேற்குறித்த வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்தகோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனங்களை 1982ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 30 ம் திகதி (30 - 4 - 1982) வெள்ளிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் குறித்த ஆதனங்களிடமாக விருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**ஆதனங்களின் மதிக்கப்பட்ட விலை:—**

| | | |
|---|---|---|
| 1 ம் ஆதனம் | ரூபா | 12, 000/- |
| 2 ம் ஆதனம் | ரூபா | 6,000/- |

**ஆதனடாப்பு**

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டி கோயிற்பற்று உடுப்பிட்டி 'இறையனங்கன் சீமை' கிபர 17 தோட்டம் 1 கூடிய நி. பர. 18 குளி 6 இதில் கிழக்குப் புறமாக நி. பர. 14 குளி 11 எல்லை கிழக்கு சபாபதிப் பிள்ளை சுந்தரத்துக்கும் மறுபேருக்குமுடைய வாதனம் வடக்கு ஒழுங்கை மேற்கு முருகர் வேலுப்பிள்ளைக்குடைய ஆதனமும் வேலுப்பிள்ளை கைம்பெண் இளையாச்சிக்குடைய வாதனமும் தெற்கு மாணிக்கவாசகம் பெண் கனகாம்பிகைக் குடையவாதனம். இவ்வெல்லைக்குள்பட்ட நிலம் அடங்கலிற் சொரியலாய் கி, பர 4ம் இக்காணிக்குக் கிழக்கேயுள்ள செவ்வரதிசீமா என்னும் காணிக்குள் இருக்கும் கிணற்றிலிதற்குரிய பங்கும் வழிவாய்க்காலுரித்தும்.

2 வெ 'இறை இளகுவெளித்' தோட்டம் கிழக்கு கி. பர 11⅛ இதில் நாலில் மூன்று பங்கும் வெ 'இறைசோதி தோட்டம்' கி. பர. 5⅜ இதில் நாலிலொருபங்கு சேர்ந்தொன்றான காணிக்கு நி. பர. (குளி 5½ இதில் கிழக்குப்புறமாக நிந்தமான கி. பர. 4. எல்லை கிழக்கு இளையதம்பி செல்லையாவுக்கும் மறுபேருக்குடைய வாதனம் வடக்கு ஒழுங்கை. மேற்கு இராசரத்தினம் பெண் செல்லம்மாவுக்குடைய வாதனம் இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் பனைகள் வடலிகள் அடங்கலிற் சொரியலாய் அரைவாசியும்.

மேற்குறித்த எதிராளிகள் குறித்த வழக்காளிக்கு 5950 ரூபாவும் மேலும் 3000 ரூபா வருடம் ஒன்றுக்கு நூற்றுக்கு பத்து வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1976 ம் ஆண்டு வைகாசி மாதம் 7 ம் திகதியிலிருந்து தீர்வைத்திகதியாகிய 1976 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 21 ந் திகதி வரையுமான வட்டியும் அதன்பின் தீர்வைமுடிந்த தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்டவட்டியான வருடமொன்றிற்கு நூற்றுக்கு 9 வீதம் வட்டியும் வழக்குச் செலவும் கொடுபட வேண்டியிருக்கிறது. இத் தொகையில் 1981 ம் ஆண்டு கொடுபட்ட ரூபா 3000/- கழிபடும்.

புலோலிமேற்கு
புலோலி
8 - 3 - 1982 — 19 1/327-82

க. நா. சுப்பிரமணியம்
கொமிஷனரும்
விலைமதிப்பாளரும்

## தேடிப் பிடிக்கட்டுமாம்

(8 ஆம் பக்க வளர்ச்சி)

பாலாவிப் பாரம்பரியத்துக்கு மேலாக வேறொன்றுண்டா என்று வினவுகின்றேன்.

மரபுகாத்துவந்த மாண்புசால் பெருமக்களை இப்பொழுது நினைவுகூர என் இதயம் துடிக்கின்றது

நாவலர்பெருமான் சைவக் காவலனாக நல்வழி காட்டியநெறி வள்ளல் இராமநாதன் சைவப் பெரியார் சிவபாதசுந்தரம்பிள்ளை சைவவித்தியா விருத்திச் சங்க இராசரத்தினம் கலாநிதி நடேசபிள்ளை வீரர் வைத்திலிங்கம் துரைசுவாமி வித்துவசிரோமணி ந. ச பொன்னம்பலபிள்ளை, ஸ்ரீ த. கயிலாயபிள்ளை ஸ்ரீ பசுபதிச்செட்டியார் சட்டத்தரணி நாகலிங்கம் நீதியரசர் செல்லப்பாபிள்ளை போன்றோர் இந்தக் கல்லூரியை இந்துசாதனத்தை, சைவவித்தியா விருத்திச் சங்கக் கல்விக் கழகங்களை இந் நாட்டில் நிறுவாதிருந்திருந்தால் இன்று எங்கள் நிலைமை யென்ன!

சாந்தம் பொறை தயை என்ற சால்பின் வழிநிற்கும் சைவமக்கள் ஏமாந்துபோகக்கூடியவர்கள் என்று விபரீதங்கள் விளைவிக்கப்படுகின்றன? அராபியனும் ஒட்டகமும் என்ற அந்தக் கதை கட்டுக் கதையல்ல உண்மையை ஒட்டியதென்றுதான் எண்ணவேண்டியிருக்கின்றது நாம் இப்போதிருக்கும் நிலைமையில்.

## சென்னை சமாசத்தின் 76ஆம் சித்தாந்தமாநாடு

காசிவாரணசியில் மாசித் திங்களில் சென்னைச் சைவ சித்தாந்த மகாசமாசத்தினரின் 76ஆம் ஆண்டு மாநாடு மிகச்சிறப்பாக நிகழ்ந்தது.

இலங்கையிலிருந்து பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியவர்களும் சைவப்புலவர் க. கனகராசா அவர்களும் சென்றனர்.

மங்கையர் மாநாட்டிலே செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் "பரஞ்சோதி முனிவர் காட்டும் சைவசித்தாந்தம்" என்ற பொருளில் விரிவானவுரையாற்றினர்

தலைமையுரை திருமதி சாரதா தம்பியாரூரன் அவர்களால் நிகழ்த்தப்பெற்றது.

சைவர் மாநாட்டுக்கு ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சுவாமித்தம்பிரான் சுவாமிகள் தலைமைதாங்கிப் பேருரை அருளினர். சைவப்புலவர் க. கனகராசா அவர்கள் நூல்களை வெளியீடு செய்தனர்.

மாநாட்டில் கலந்த அன்பர்கள் காசிதலயாத்திரை முதலாகப் பெருந்தலங்களில் வணக்கஞ் செலுத்தி பதினைந்து நாட்கள் தொடர்ந்து புண்ணிய நிகழ்ச்சிகளில் ஈடுபட்டனர்;

ஒவ்வாததைச் சுட்டிக்காட்டி உண்மையை எடுத்துரைத்தால் அவ்வாறு அறநெறி நிற்பவர்கள் ஒற்றுமைக்குப் பங்கம் விளைவிக்கின்றனர் எனக் குற்றஞ் சுமத்துபவர்கள் தாங்களே ஒற்றுமையைக் குலைக்கும் ஒவ்வாத கருமத்தில் ஈடுபட்டிருந்து கொண்டு ஐக்கியத்தின் தத்துவத்தைப் போதிப்பது வேடிக்கையன்றோ? அயல் வீட்டவர் எங்கள் வீட்டில் வந்து புகுந்திருக்கும்போது இது அடாத்து என்று நாங்கள் சொன்னால் ஒற்றுமையைக் குலைக்க வேண்டாம் என்று அவர் சொல்வது போலல்லவா இருக்கின்றது. இந்த விந்தையை என்ன என்பது.

வல்லடி வழக்குக்குச் செல்லவில்லை நாங்கள். எங்களை எங்கள் பாட்டில் விட்டுவிடுங்கள். மருக்கைதச் சந்தியில் மற்றைய மூன்று கோணங்கள் உண்டு. இன்னும் வேறு இடங்கள் உண்டு. தேவாலயங்களை அமையுங்கள். தேவர்கள் தேடித்தந்த பாலாவித் தீர்த்தத்தைத் தேடிப்பிடியுங்கள் என்று எங்களுக்குப் புத்திசொல்வதை விட்டு உங்கள் உள்ளத்தில் உண்மையைத் தேடிப் பிடியுங்கள்

இந்துசாதன ஆசிரியரின் உரையின் பின் இந்துக் கல்லூரி ஆசிரியர் கலைமாமணி க. சிவராமலிங்கம் அவர்களும் இன்னும் பலரும் உரை நிகழ்த்தினர்.

(வளரும்)

# ஈட்டு வழக்கில் விற்பனவுக்கான அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்
சேதுநாதர் வேலுப்பிள்ளை
புலோலி தெற்கு. புலோலி,

இலக்க ஈடு/14853 — வழக்காளி

எதிராக

1. ஆழ்வாப்பிள்ளை வல்லிபுரம் கைம்பெண் சிவக்கொழுந்து
2. வல்லிபுரம் கோபாலபிள்ளை
3. பெண் செல்லம்
கடற்கரை வீதி, பருத்தித்துறை

— எதிராளிகள்

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோர்ட்டால் எனக்குக் கிடைத்த விற்பனவுக்கான அதிகாரத்தின்படியும் இதன்கீழ் விபரிக்கப்படுமாதனம் 1982 ஆம் வருஷம் சித்திரை மாதம் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் குறித்த காணியிடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக், வடமராட்சிப் பகுதி பருத்தித்துறைக் கோயிற்பற்று, பருத்தித்துறை வென்றிபாகுதேவன் குறிச்சியிறை, "தில்லை நின்றதிணி" மிபர. 2. இரண்டு, கொட்டில், கிணறும். எல்லை கிழக்கு. முருகப்பர் பொன்னுச்சாமியினுருமைக்காரருக்குரிய ஒழுங்கை, வடக்கு: கடற்கரை, மேற்கு முடிக்குரிய ஒழுங்கை, தெற்கு ரோட்டு. இவ்வெல்லைக்குட்பட்டவைகள் முழுவதும். முற்பதிவு பரு; A 153/234.

| | | |
|---|---|---|
| தாட்சித்தொகை: | ரூபா | 8790 00 |
| 24-1-79 - 3-8-1979 வரை 18% | | 570 00 |
| 3-8-79 — 10-4-1982 | | 2256 44 |
| | | 10616 44 |
| கோட்டுச்செலவில் ஒரு பகுதி | | 275 00 |
| | | 10891 44 |

நீதிமன்றத்தால் ஏற்கப்பட்ட மொத்த விலைப்பெறுமதி ரூபா 40000 00

"உமாபதி"
தெல்லண்டை ரோட்டு,
துப்பளை,
பருத்தித்துறை,
15-3-1982

R. S. இராமநாதன் J. P.
நீதிமன்றவிற்பனவு ஆணையாளர்
விலைமதிப்பாளர்
பிரசித்த ஏலவிற்பனையாளர்
Commissioner of Sales
Valuer & Public Auctioneer

81

# கோட்டுக் கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்
வழக்கு இல. 15746 / ஈடு.

வல்லிபுரம் கந்தையா, கரணவாய் தெற்கு கரவெட்டி
எதிராக — வழக்காளி.
கந்தையா கந்தவனம் மறுநாமம் கணபதிப்பிள்ளை
அல்வாய் தெற்கு, அல்வாய் — எதிராளி.

மேற்குறித்த வழக்கின் தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனத்தை 1982 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ம் திகதி (28 - 4 - 1982) புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் குறித்த ஆதனத்திடமாக இருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**ஆதனத்தின் மதிப்பிட்ட விலை — ரூபா 7500/=**

**ஆதன டாப்பு**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி கட்டைவேலிக் கோயிற்பற்று அல்வாய் நீலகுட்டியார் குறிச்சியிறை "படவாட்புலம்" நி பர 20¾ வெ தோட்டம் 3 இதில் கிணற்றுக்கும் கிணற்றுப் பொதுப் பாவிப்புக்கும் விடப்பட்ட குளி 12 உம் மேற்கே யிருக்கும் கைஒழுங்கைக்கும் பொதுப் பாவிப்புக்குமாகக் கழித்துவிடப்பட்ட குளி 6 உம ஆக நி ப 1 கழித்து மிகுதியில் வடக்குப் புறமாக 11/24 பங்குக்கு நி பர 13 குளி 17 5/8 பனைகள் வடலிகள் தென்னைகள் இலந்தைகளும் எல்லை கிழக்கு வெள்ளவாய்க்கால், வடக்கு வேலுப்பிள்ளைக்கும மறுபேருக்கும், மேற்கு கைஒழுங்கையும் கணபதிப்பிள்ளைக்கும் மறுபேருக்கும், தெற்கு கணபதிப்பிள்ளை பெண் வள்ளியம் மறுபேருக்கும். இதடங்கலிற் சொரியலாய் நி பர ஒன்று, குளி நாலு (நி. பர. 1 குளி 4)

மேற்குறித்த எதிராளி குறித்த வழக்காளிக்கு ரூபா 700/- உம் மேலும் ரூபா 400/- க்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 10 % வீத வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1980 ம் ஆண்டு மார்கழி மாதம் 5 ம் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1981 ம் ஆண்டு மார்கழி மாதம் 18 ந் திகதி வரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 9 வீத வட்டியும் வழக்குச் செலவும் கொடுபட வேண்டியிருக்கிறது.

புலோலி மேற்கு.
புலோலி,
4-3-1982. — 80 1/328 19-3-82

க. நா. சுப்பிரமணியம்,
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.

Hindu Organ

Fri. 26-2-82, 5, 12, 19-3-8

## AGAIN INTER-RELIGIOUS AGGRESSION!!

Now it is near Kumu'amunai, the scene of operation shifting from Mannar to Mullaitivu District. However, the sacrilegious activity is not of the same party

A Saiva Shrine is again the target; the encroachment on it has been engineered by the followers of another Faith.

How the Neo-philosophers of Hinduism whose declared knowledge appears to be stemming from a study of the oft-quoted opinions of Western students of the most Ancient Eastern Religion, will react to the aggressive activities of persons professing the Buddhist Faith around a Saiva Shrine at Kumulamunai in the Mullaitivu District, we are anxiously looking forward to

Saiva Siddhantam and the significant aspects of Saivaism have been so explicitly explained by the ages of old and perspicuously paraphrased by later Saints in their Thirumurais that no Saivaite requires to be preached what his Religion stands for and what his scriptures teach much less by means of the borrowed rhetoric of western students of religious research.

Kumulamunai has been placed in the same peculiar predicament as that in which Mathoddam presently stands. The only difference is that the encroaching party belongs to a third religion while the aggrieved party remains the same

The Moral Code in spiritual affairs applies equally to all religions, The Moral Law of reciprocal respect for the sanctity of spiritual belief is so simple that no person belonging to any one religion can usurp on the property of another religion without being guilty of violation of the moral code that has acquired legal authority

Religion and Politics have to remain apart in two different planes. The latter certainly belongs to a separate category - namely, the sphere of expediency, or scheming or craftiness. The great Patriot Mahatma Gandhi had strived all his life-time to purify political activities by means of prayers

It would be well for prancing politicians of the present age who occasionally express love of their religion, to study the life and works of Gandhi and make a sincere effort to realize the special significance of religion. The display of their knowledge of oft-repeated definitions of religions by Western Scholars can hardly be of any real help.

The Saiva Paripalana Sabhai and the Hindu Organ both established in the year one thousand eight hundred and eighty nine, nine decades ago, have a special place in the religious affairs of this country.

The illustrious names of Vidya Sromani N. S. Ponnampalapillai one of the foremost disciples of the Great Navalar, T. Chhllappahpillai, retired Judge of the Supreme Court of Travancore, Sir Ponnampalam Ramanathan, Sir Ambalavanar Kanagasabai,, Sir Waitilingam Duraisamy, Sri A. Tilliampalam, Saiva Periyar S. Sivapadasunderampillai, stalwarts who in the past guided the Saiva ParipalanaSabhai and Shri A. Sabapathy, then Member of the Legislative Council (and Sir Ramanathan's lieutenant) Shri M. S. Eliathamby, Pandit V T. Sambhandan, stand before us as we take pride in reaffirming our vital role in the religious affairs of our country

The Great Navalar did not disrupt and could not have disrupted the unity of the people of the North when he went hammer and tongs in protesting against the plague of proselytism; in effect he had been reuniting those who had been lured into foreign faiths by alien proselytisers. The Navalar Tradition has been so laudably noble that it has come to stay

Kumulamunai or Vavuniya or Mathottam which ever may be the scene of encroachment on the traditional rights of one religious body by another, must necessarily be saved

## Tradition too Strong To Be Thwarted

Human conduct obeys a code of practice where precedents acquire prescriptive right. This is common ground for politicians as well as religionists

The politician often pleads the inviolability of traditional homelands and resists forceful colonization of such regions by outsiders. These so called traditional home-lands acquire such prescriptive title as to enable those areas aspire to be recognized as autonomous regions

In the sphere of religion, tradition has acquired greater force. The existence of Islamic Republics will bear testimony to the fact that tradition in religious practice has the force of Constitutional Law

However, in the context of modern outlook, water tight compartments based on religious allegiance, need not be desirable so long as mutual respect for religious practices is forthcoming. Religious enthusiasm when allowed to run riot will lower the respect for established tradition

We have in an earlier issue of the Hindu Organ made it clear that the respect for traditions must be borne in mind by everyone who professes a religion

But unfortunately the recent happenings near the ancient Saiva Shrine at Thiruketheeswaram disclose a tendency to defy traditional observances The Temple at Thiruketheeswaram has a history of antiquity, hallowed by the Holy Hymns of the Great Saiva Saints Thirugnanasambadar and Sundaramoorthy Nayanar.

A Shrine of the magnitude and majestic magnificence of Thiruketheeswaram, naturally must have a very extensive area around it observed as sacred

Similarly Churches, Mosques Viharas and other places of worship have their own Sacred Areas

It would be an irreligious act if followers of any one religion encroached on the preserves of another religion.

If on the road to Madhu Church, Saivaites or Muslims or Buddhists endeavoured to establish their places of worship, it would be a calculated move to create meaningless religious animosity.

Mahtoai-Mathottam and the perennial Palavi have acquired a permanent place in the history of this historic Isle as the Thiruketheeswarrm Triangle

In the small Islot of Mannar there are Churches and Temples, none of them so situated as to cause embarrassment to the others.

That Christianity was introduced into this country by the Portuguese, centuries after the sacred Saiva Shrines were consecrated is an axiomatic truth. Thiruketheswaram and the Sacred waters of saltless Palavi belong to the epic past and therefore, have an established tradition of their own with a definite and defined sacred area. Palavi, peerless in purity and prominent in physical geographical records need not be searched for; none but the spiritually blind will be blind to those irrefutable facts

## ஆலயங்களைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டியவை

1 நல்லிலக்கணம் வாய்ந்த பிரமச்சாரியாயிருந்து சிவாசாரியத்துவம் பெற்ற பூசகர் ஒருவர் அக்கோவில் சேவைக்கென்றே தம்மை அர்ப்பணித்து வாழ்வதற்குப் போதிய வசதிகள் இருந்தால்,

2. அர்ச்சகர் தினமும் ஆன்மார்த்த பூசைமுடித்துப் பூதசுத்தி அந்தர்யாகம், புண்யாஹவாசனம் முதலிய சுத்திக்கிரியைகள் பக்திசிரத்தையாக நிறைவேற்றியதன் சார்பான தெய்வீகக்களையுடன் பூசை கிரியைகளில் ஈடுபடுபவராயிருந்தால்.

3. பூசகர் பிரசாத யோகநிலையை அறிந்து விளங்கி அதை அனுசரித்துச் சுவாமியை ஆவாஹனம் பண்ணும் கிரமமிருந்தால்,

4. தினமும் குறைந்த பட்சம் பஞ்சகவ்விய அபிஷேகமாவது நடைபெறும் ஒழுங்கிருந்தால்,

5, ஆலயமூர்த்தி வெறும்விக்கிரகமல்ல, நம் செயலனைத்தையும் நேரே காணும் கண்ணும், நாம் கிளப்பும் ஒலிகளை நேரடியாகக் கேட்கும் காதும், நம் உள்ளத்துணர்வுகளை நேரே உணரும் உணர்வும் கொண்டு ஜீவகளை ததும்பும் தெய்வீக அனற்பிழம்பு அது என்னும் அச்சபயத்துடன் அதை அணுகும் பழக்கமிருந்தால்,

6. ஆலயசம்பந்தமான எந்த ஒரு அலுவலிலும் தெரிந்துணர்ந்து செய்தல் அறிந்து விளங்கிச் செய்தல் என்ற நிலைகளுக்கு விசேட முக்கியத்துவம் கொடுக்கும் பண்பிருந்தால்,

7. நடைமுறை நிகழ்ச்சிகளில் இடம்பெறும் உண்மையான குறைபாடுகளை ஆதாரபூர்வமாக எடுத்துக்காட்டவல்ல அறிஞர்களுக்கு வரவேற்பிருந்தால்,

8. ஆலயசேவையிற் சம்பந்தப்படும் அனைவோரும் விசேடமாக அர்ச்சகர்களும், நிர்வாகஸ்தர்களும் சைவ ஆலய சைவசித்தாந்த சிவபுராண அறிவாராய்ச்சியும் அத்துறையில் மேலும் மேலும் பிரவர்த்திக்கும் ஆவலும் உள்ளவர்களாயிருந்தால்,

9, பரிசாரகர். பண்டாரம். மேளகாரர்: தொண்டர்கள். தொட்டாட்டுவேலைக்காரர். உபயகாரர், வழிபடுவோர், நிர்வாகஸ்தர் என்போர் சைவானுட்டானப்பசுமையும், திருவெண்ணீற்றுக் கோலமும்; பொலியவிளங்கும் நிலையிலிருந்தால்,

10. சைவத்திருமுறைகள் வேதமே எனக்கொண்டு வேதங்களுக்குரிய முதன்மை பூசைக்கிரியையில் அவற்றுக்கும் வழங்கப்பட்டால்,

11. சிவாசாரியர் (குருக்கள்) இரண்டாம் பட்சமாகக் கருதப்படாமல், சிவன் எனக் கருதிப் பூசைவிழாக்களில் அவர்கள் கௌரவிக்கப்படும் சீர்மை இருந்தால்,

12. இறைவை வழிபாட்டுக்காகவன்றி வேறு எந்நோக்குக்காகவும் ஆலயங்களைப் பயன்படுத்தாத நேர்மை இருந்தால்,

13. காசுக்குத்தக்கபூசை, துண்டுக்குதக்க அர்ச்சனை என்ற வினைணங்கள் வெளியேற்றப்பட்டிருந்தால்,

14. அருள் வளம் பெறுக வேண்டுமென்ற உணர்ச்சித்துடிப்புடன் ஆடம்பரமற்ற எளிய முறையில் உடல் இளைக்க வருந்தி வருந்திப் பணிபுரியும் அடியவர்களிருந்தால்,

15, இட்டச் செல்லத் தம் தகுதி போதுமோ என்ற அச்சத்தால் எட்ட நின்று பணிந்தருளும் பாவன பக்தர்கள் இனம் நிறைய இருந்தால்,

உங்கள் கோவிலிலே தெய்வ சாந்நித்தியம் விளங்குதல் பற்றி எவ்வித ஐயமும் இருக்காது. கவர்ச்சிக்கான புறநிலை விருத்திகள் பெருவாரியாக உள்ள ஆலயங்களிலேதான் திருவருள் இருக்குமென்று அலையும் ஏமாளிப் போக்கும் அதனூற் பெருமளவு குறையும். கோவிலுக்குச் சனங்கள் நிறையவரவில்லையே நித்திய பூசைக்கே தட்டுப் பாடாயிருக்கிறதே என்று ஏங்கிக்கிடக்கும் பூர்வீக புராதன கோவில்கள் — கிராமத்தவர்கள் முதுசங்கள்—யாவும் புனர் வாழ்வுபெறும்.

(வித்துவான் மு. நந்தையா அவர்கள் தொகுத்தளித்து தம்பிரான் சுவாமிகள் வெளியிட்ட தண்டுப்பிரசுரத்திலிருந்து எடுக்கப்பட்டது)

வான்முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோனமுறை யரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலக மெல்லாம்.

*Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450, K; K. S. Road, Vannarponnai, Jaffna ( Telephone: 356 ) on Friday, 26-2-82, 5, 12, 19-3-82*

Editor-in-Chief:
R. N, Sivapirakasam